I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES P.W.1
OS.NO.156 of 2019

Name : நக்கீரன்

Father/Husband Name : கோபாலகிருஷ்ணன்

Age : 76

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 04.02.2026

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

விசாரணை தொடங்கிய நேரம் : மதியம் 02.35

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.2 ஆவணம் பதிவு அலுவலகத்தில் வாங்கப்பட்ட நகல்தான் என்றால் சரிதான். பதிவு செய்யும்போது பிரதிவாதிகளிடம் அசல் கொடுத்துவிட்டார்கள் அதன் நகல் ஒன்று என்னிடம் கொடுத்தார்கள் அதுதான் வா.சா.ஆ.2 ஆகும். அந்த ஆவணத்தை சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் கொடுத்தார்கள். 21.03.2016 அன்று என்ன ஆவணம் பதிவானதோ அதன் நகல் அன்றே எனக்கு கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். அவர்களிடம் கொடுத்த ஆவணத்தில் சுமார் ரூபாய் ஒன்றரை லட்சத்திற்கும் மேல் முத்திரைத்தாள்கள் இருந்திருக்குமா என்றால் தெரியவில்லை. என்னிடம் உள்ள வா.சா.ஆ.2 ஆவணத்தில் எவ்வளவு முத்திரைத்தாள் வாங்கினார்கள் என்றும், பதிவு கட்டணம் எவ்வளவு கட்டினார்கள் என்றும் குறிப்பை நான் பார்த்தேனா என்றால் இல்லை.

13 வருட காலங்களாக வா.சா.ஆ.2 ஆவணம் என்னிடம் உள்ளது என்றால் சரிதான். ஆனால் கடந்த 13 வருடங்களாக இந்த விவரங்களை நான் பார்க்கவில்லை. வழக்கு தாக்கல் செய்யப்பட்டபோது வா.சா.ஆ.2 ன் நகலை நான் பிரதிவாதிகளுக்கு அனுப்பினேனா என்றால் இல்லை. என்னிடம் இவ்வாறு நகல் இருக்கின்றது என்று பிரதிவாதிகளுக்கு சொன்னேனா என்றால் அவர்களுக்கே தெரியும். 23.10.1982 தேதியிட்ட அசல் பாகப்பிரிவினை பத்திரத்தை எனக்கு திருப்பி தர வேண்டும் என்று பரிகாரம் இந்த வழக்கில் நான் கேட்கவில்லை என்றால் சரிதான்.

தாவா சொத்து அம்மனாங்குப்பம் என்ற இடத்தில் உள்ள சர்வே எண் 71 மற்றும் 72 சம்பந்தப்பட்ட பட்டா பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் சரிதான். அந்த பட்டா ஆவணங்கள் முறையே பி.சா.ஆ.7 மற்றும் பி.சா.ஆ.8 ஆகும்.

என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் 08.02.2019 அன்றுதான் தாசில்தார் அவர்களால் பிரதிவாதிகள் பெயரில் மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரிதான். என் பெயரில் உள்ள பட்டா எதையாவது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2012 க்கு முன்பாக உள்ள பட்டா ஆவணம் எதையாது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அவ்வாறு ஏன் என் பெயரில் உள்ள பட்டா, சிட்டா ஆவணங்களை நீதிமனறத்தில் தாக்கல் செய்யவில்லை என்பதற்கான காரணத்தை நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

அடமான பத்திரத்தில் சாதாரணமாக பணம் வாங்குபவர்தான் கையொப்பம் போடுவார்கள் என்றால் சரிதான். மற்றவர்களின் அடமான பத்திரத்தை நான் பார்த்ததில்லை. எனக்கு தெரிந்ததை சொல்கிறேன்

என்றால் சரிதான். போன வாய்தாவில் குறிப்பிட்ட சாட்சிகளிடம் இந்த வழக்கின் விவரங்களை பற்றி சொன்னேனா என்றால் சொல்லவில்லை. என் சகலைப்பாடி கார்த்திகேயனுக்கு இவ்வாறு நான் சாட்சியம் அளிக்க வந்தது தெரியுமா என்றால் தெரியாது. பி.சா.ஆ.7 மற்றும் 8 முன்னிலைக்குத்தான் பிரதிவாதிகள் பெயரில் கிஸ்து ரசீது வழுங்கப்பட்டுள்ளது என்றாால் சரிதான். அதற்கு முன்பு என் பெயரில்தான் இருந்தது.

21.03.2012 தேதியில்கூட என் பெயரில்தான் ரசீது வந்தது. அதன் பின்னர்தான் பிரதிவாதிகள் பெயரில் மாறியது என்றால் சரிதான். 2019 ல் நான் இந்த வழக்கை தாக்கல் செய்தபோது இவ்வாறு பட்டா பெயர் மாறியுள்ளது சம்பந்தமாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நானும் இதுநாள்வரை தாசில்தார், குடியாத்தம் மற்றும் கிராம நிர்வாக அலுவலகம் அம்மனாங்குப்பம் அவர்களிடம் எந்த மனுவும் கொடுக்கவில்லை.

22.02.2019 அன்று நான் அனுப்பிய நோட்டீஸ்க்கு பிரதிவாதிகள் பதில் அறிவிப்பு (பி.சா.ஆ.4) அனுப்பிய விவரம் தெரியுமா என்றால் நான் வழக்கிறஞரிடம் கொடுத்துவிட்டேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது.

வா.சா.ஆ.6 ஆவணத்தை யார் வாங்கியது என்றால் நான் வாங்கவில்லை. யார் வாங்கினார்கள் என்று தெரியவில்லை. இன்றுதான் முதல்முறையாக மேற்கண்ட ஆவணத்தை நான் பார்க்கிறேன். எதற்கான வா.சா.ஆ.6 ஆவணத்தை நீதிமன்றத்தில் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்று தெரியாது என்றால் சரிதான்.

இந்த வழக்கை நான் பத்திரத்தை ரத்து செய்ய வேண்டும் என்று தாக்கல் செய்தேனா அல்லது செல்லத்தக்கது அல்லது என்று போட்டேனா என்றால் செல்லாது என்றுதான் தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி தாக்கல் செய்த பதிலுரையை நான் பார்த்தேனா என்றால் பிரதிவாதிகள் என்ன பதில்தாக்கல் செய்துள்ளார்கள் என்று தெரியாது. அதனால்தான் பிரதிவாதிகள் பதிலில் என்ன சொன்னார்களோ அது குறித்து என் பிரமாண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான்.

தாவா சொத்துக்கும் என் வீட்டிற்கும் எவ்வளவு தொலைவு என்றால் என் வீட்டிற்கு பின்புறம் தாவா சொத்து உள்ளது. செக்காக கொடுத்த பணத்தை வைத்து என்ன செய்தேன் என்றால் வீடு கட்டினேன். தாவா சொத்துக்கு முன்பாக உள்ள பழைய வீட்டை இடித்துவிட்டு புதிய வீடு கட்டினேன். வீடு கட்ட சுமார் 20 லட்சம் செலவானது. வீடு இரண்டு அடுக்கில் கட்டினேன். அதற்கு முன்பாக அந்த இடத்தில் ஓட்டு வீடு இருந்தது. பிரதிவாதிகள் கொடுத்த பணத்தை வைத்துதான் வீடு கட்டினேன் என்ற விவரத்தை வழக்கிலும், அறிவிப்பிலும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

காசோலை எண் 040842, 21.03.2012 தேதியிட்ட HDFC சென்னை வங்கி கிளை காசோலை ரூ.15,27,600/- பணத்தை வைத்துதான் வீட்டை கட்டினேன் என்று சொல்கிறேன் என்றால் சரிதான். கார்த்திகேயன் உட்பட என் குடும்பத்தினருக்கு இந்த பணத்தை வைத்துதான் வீடு கட்டினேன் என்றும், கடனும் அடைத்தேன் என்ற விவரம் தெரியும். பிரததிவாதிகள் கொடுத்த காசோலையை வைத்து எத்தனை பேருக்கு

கடன் அடைத்தேன் என்றால் என் சகலை கார்த்திகேயன் மற்றும் குடியாத்ததில் வெங்கடேசன் என்ற ஒருவர் ஆகியோர்களுக்கு கடன் அடைத்தேன், மீதி பணத்தை வைத்து வீடு கட்டினேன்.

என் சகலைப்பாடியிடமும், மேற்சொன்ன வெங்கடேசன் ஆகியோர்களிடம் கை மாற்றாகத்தான் பணம் வாங்கினேன். இரண்டு பேரிடம் மொத்தம் ஐந்து லட்சம் பணம் வாங்கினேன். வெங்கடேசன் என்பவர் எனக்கு உறவினர். வெங்கடேசனிடம் பாண்டு எதுவும் எழுதி கொடுக்கவில்லை, பத்திரமும் எதுவும் கொடுக்கவில்லை. வெங்கடேசன் மற்றும் கார்த்திகேயனிடம் எப்போது கடன் வாங்கினேன் என்றால் கிரையத்திற்கு ஒரு வருடத்திற்கு முன்பாக வாங்கினேன்.

வாங்கிய பணத்தை திருப்பி கொடுக்குமாறு கேட்டதால் இந்த பணத்தை எடுத்து அவர்களின் கடனை அடைத்துவிட்டேன். அம்மனாங்குப்பத்தில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் SBI, IOB வங்கிகள் உள்ளது. HDFC வங்கி உள்ளது. எல்லா வங்கிகளும் என் வீட்டிலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் தான் உள்ளது. வங்கியில் விவசாய கடன் என்றால் 50 பைசா வட்டி. மற்ற வங்கிகளில் HDFC ல் 75 பைசா வட்டி என்றால் அதற்கு குறைவாகத்தான் இருக்கும். மற்ற வங்கிகளிலும் 50 பைசா பக்கம்தான் இருக்கும்.

என் வீட்டின் அருகில் உள்ள மூன்று வங்கிகளில் நான் கடன் எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். வெங்கடேசன் மற்றும் கார்த்திகேயனும் என்னிடம் வங்கியில் கடன் வாங்கியாவது எங்கள் கடனை அடை என்று சொன்னார்களா என்றால் இல்லை. வெங்கடேசனிடமும், கார்த்திகேயனிடமும் வட்டி எதுவும் கொடுக்கவில்லை கை மாற்றாகத்தான் பணம் வாங்கினேன் திருப்பி

கொடுத்துவிட்டேன். அவர்களிடமே 10 லட்சம் கடன் கேட்டிருந்தால் கொடுத்திருப்பார்கள் என்றால் சரிதான் ஆனால் நான் கேட்கவில்லை.

அவ்வாறு அவர்களிடம் கேட்டிருந்தால் 10 லட்சத்தை வட்டி இல்லாமல் கொடுத்திருப்பார்கள் என்றால் சரியல்ல. சிறிய தொகை என்றால் கொடுப்பார்கள் பெரிய தொகை என்றால் வட்டி கேட்பார்கள். பிரதிவாதிகள் கொடுத்த பணத்தை வைத்துதான் வெங்கடேசன் மற்றும் காரத்திகேயனிடம் வாங்கிய கடனை அடைத்தேன் என்ற விவரத்தை வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான்.

வங்கியில் அசல் பாகப்பிரிவினை பத்திரத்தை காண்பித்து கடன் கேட்டேனா என்றால் இல்லை. சொசைட்டியில் இரண்டு முறை வாங்கியிருக்கிறேன். கோவிந்தாபுரம் சொசைட்டியில் வாங்கினேன். அது கூட்டுறவு வங்கி. 1982 பத்திரத்தை அடமானம் வைத்து அங்கு கடன் வாங்கினேன். எவ்வளவு பணம் கடனாக வாங்கினேன் என்றால் ரூபாய் 40,000/- பணத்தை வாங்கினேன். எப்போது வாங்கினேன் என்றால் இந்த கிரையத்திற்கு சுமார் 10 வருடங்களுக்கு முன்பாக வாங்கினேன்.

கோவிந்தாபுரம் கூட்டுறவு வங்கி செயலாளருக்கு அடமான பத்திரம் எழுதி வைத்து இந்த பத்திரத்தை வைத்து ரூபாய் 40,000/- கொடுத்தார்கள் என்றால் சரிதான். ரூ.40,000/- அசல் மற்றும் வட்டி செலுத்திவிட்டு அந்த பத்திரத்தை மூட்டுவிட்டேன் என்றால் இரண்டு வருடத்தில் மூட்டுவிட்டேன். பயிர் கடன்தான் வாங்கினேன் என்றால் சரிதான். அது பட்டா, சிட்டா மற்றும் அசல் பத்திரத்தின் அடிப்படையில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். கடனை அடைத்த பின்னர் திரும்பவும் கோவிந்தாபுரம் கூட்டுறவு வங்கியில் கடன் வாங்கினேன்.

கடனை அடைத்துவிட்டால் மீண்டும் எத்தனை முறை வேண்டுமானாலும் வாங்கிக்கொள்ளலாம் என்றால் சரிதான்.

பிரதிவாதிகளை பார்ப்பதற்கு முன்பாக நான் கோவிந்தாபுரம் வங்கிக்கு போகவில்லை என்றால் சரிதான். கோவிந்தாபுரம் குடியாத்தம் தாலுக்காவில் உள்ளது. கோவிந்தாபுரம் வங்கியில் மானியம் பெற்றுள்ளேன் என்றால் இல்லை. கோவிந்தாபுரம் வங்கியில் கடனை திருப்பி செலுத்திய பின்னர் பிரதிவாதிகளை பார்ப்பதற்கு முன்பாக அசல் பத்திரம் என்னிடம்தான் இருந்தது.

கோவிந்தாபுரம் வங்கியில் பத்திரத்தை வைத்து கடன் பெற்ற விவரத்தை வழக்கில் சொல்லவில்லை என்றும் அந்த அடமான பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை சரிதான். தாவா சொத்தின் பத்திரத்தை வைத்துதான் கோவிந்தாபுரம் வங்கியில் கடன் வாங்கினேன் என்றால் சரிதான்.

கோவிந்தாபுரம் வங்கியை தவிர வேறு எந்த சொசைட்டி அல்லது வங்கியில் கடன் வாங்கவில்லை. தாவா சொத்துக்கு 2012 க்கு முன்பாக என் அப்பா இருந்தபோது பயிர் காப்பீடு நான் செய்திருக்கிறேன். தாவா சொத்து சம்பந்தமாக பட்டா, சிட்டா என் பெயரில் இல்லாதால்தான் நான் பயிர் கடன் மற்றும் அடமான கடன் எதுவும் வங்கியில் வாங்க முடியவில்லை என்றால் சரிதான். 2012 ம் வருடத்திலிருந்து அவ்வாறு கடன் என்னால் வாங்க முடியவில்லை என்றால் சரிதான்.

2012 ம் வருடத்திலிருந்து கடன் வாங்க நான் எந்த முயற்சியும் செய்யவில்லை என்றால் ஆவணம் எதுவும் என் பெயரில் இல்லாததால் முயற்சி செய்யவில்லை. ஏதாவது ஒரு ஆவணம் என் பெயரில் வர வேண்டும் என்பதற்காகத்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன்

என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் என் சொத்தை விற்க வந்தார்கள். அது அடமானம் வைத்து சொத்துதான் அதை ஏன் விற்கிறீர்கள் என்று நான் கேட்டேன். அதனால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

முதல்முதலில் எப்போது தாவா சொத்தை விற்க பிரதிவாதிகள் வந்தார்கள் என்றால் 2016/2017 வருட காலக்கட்டத்தில் விற்க வந்தார்கள். வா.சா.ஆ.2 ஆவண நகல் குறித்து பிரதிவாதிகள் கேட்டார்களா என்றால் இல்லை. அப்போதிலிருந்து வா.சா.ஆ.2 என் கையில்தான் உள்ளது என்றால் சரிதான். சுமார் 7 வருட காலமாக வா.சா.ஆ.2 என்வசம் இருந்தது என்றால் சரிதான்.

நீதிமன்றத்தில் கோவிந்தாபுரம் வங்கியில் வைத்த அடமான பத்திரத்தை தாக்கல் செய்ய முடியுமா என்றால் போட முடியாது. ஏன் போட முடியாது என்றால் நான் கடனை திருப்பி கொடுத்துவிட்டதால் தற்போது அதை போட முடியாது. இந்த வழக்கை பொருத்தவரையில் என்னிடம் சரியான பிரதிபலனுடன்தான் தாவா சொத்தை பிரதிவாதிகள் வாங்கியிருக்கிறார்கள் என்றாலும், நான்தான் அடமான பத்திரம் என்று வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

பத்திரம் எழுதும்போதே ஏன் கிரைய பத்திரமாக எழுதுகிறீர்கள் என்று நான் கேட்டேன், ஒரு செக்யூரிட்டிக்காகத்தான் என்று சொன்னார்கள். 21.03.2012 ல் சொன்னதைத்தான் தற்போது சொல்கிறேன். அதன் பின்னர் உடனடியாக சட்ட நடவடிக்கை எதுவும் பிரதிவாதிகள் மீது நான் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

இன்றைய தேதிக்கு தாவா சொத்து என் பெயரில் உள்ளது என்பதற்கும் என் அனுபவத்தில் உள்ளது என்பதற்கும் எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை. ஏன் அவ்வாறு தாக்கல் செய்யவில்லை

என்பதற்கான காரணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பத்திரம், பட்டா, சிட்டா ஆகிய அனைத்தும் பிரதிவாதிகள் பெயரில்தான் உள்ளது என்று என்னுடைய வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் தற்போது பார்த்துவிட்டுதான் சொல்கிறேன் அதற்கு முன்பு தெரியாது. எனவே தாவாவில் சொல்லவில்லை.

2012 க்கு பின்னர் தாவா சொத்து யார் பெயரில் பட்டா உள்ளது என்று நான் பார்க்கவில்லை என்றால் நான் பார்த்தேன். அப்படி பார்த்த பின்னர்கூட இந்த வழக்கில் சுவாதீன பரிகாரம் எதையும் நான் கேட்கவில்லை என்றால் சரிதான். சுவாதீனம் என்னிடம்தான் உள்ளது. அதற்கான ஆவணம் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றும் பிரதிவாதிகள்தான் சுவாதீனத்தில் இருக்கிறார்கள் என்றால் ஆமாம். பிரதிவாதிகள் மீது தேவை இல்லாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் அதனால் வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றாலும் சரியல்ல. நான் அடமானம் போட்ட சொத்துதான் இது ஆனால் அவர்கள் பொய்யாக பதிவு செய்து விற்க வந்தார்கள்.

பிரதிவாதிகளை அலைக்கழிக்க வேண்டும் என்று இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் என் தரப்பில் கார்த்திகேயனை விசாரிக்கப்போகிறேனா என்றால் விசாரிக்கிறேன். என் மகன் அம்மனாங்குப்பம், குடியாத்தத்தில் வசிக்கிறார். இந்த வழக்கில் நான் வந்து போவது குறித்து என் மகனுக்கு தெரியும்.

இந்த வழக்கு தாக்கல் செய்தபோது சொத்தின் Guide line value தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பத்திரத்தில் (வா.சா.ஆ.2) ல் என்ன மதிப்பு இருக்கிறதோ அதை அப்படியே போட்டுவிட்டேன் என்றால் சரிதான்.

2012 வா.சா.ஆ.2 ஆவணத்தின் அடிப்படையில் 2019ல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் அடமான பத்திரம் போட்டதாக சொல்வது வழக்கிற்காக சொல்லப்படும் பொய் என்றால் சரியல்ல. அடமானம் போடுவதாக இருந்தால் எங்கள் வீட்டின் அருகில் உள்ள கோவிந்தாபுரம் கூட்டுறவு வங்கியிலோ அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலேயோ போட்டிருப்பேன் என்றாலும், அல்லது கூட்டுறவு வங்கியில் அவ்வாறு தொகை கொடுக்க மாட்டார்கள் மற்ற தேசிய வங்கிகளில் சீக்கிரம் கொடுக்க மாட்டார்கள். இவ்வாறு வங்கிகளில் போய் பார்த்தேன் என்றாவது வழக்கில் சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை.

விசாரணை முடிந்த நேரம் : 03.40 P.M.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI
Digitally signed by G SANTHI
Date: 2026.02.04 18:53:30 -0100

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.